# பெருமாள் முருகன் புதினங்களில் சிறுதெய்வ வழிபாடு

***ச. மணிகண்டன்***
முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ் உயராய்வு மையம்
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

***முனைவர் பா. நேருஜி***
ஆய்வு நெறியாளர் & உதவிப் பேராசிரியர்
தமிழ் உயராய்வு மையம், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

மலர்: 11

சிறப்பிதழ்: 2

மாதம்: ஜூலை

வருடம்: 2023

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS2i3-July.6449

***முன்னுரை***
*கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்னும் பழமொழி இன்றளவும் தமிழகத்தில் வழங்கிவருகிறது. இன்றைக்கும் நாம் நம்முடைய குல தெய்வமாகிய சிறு தெய்வங்களையே அதிகமாக வழிபடுகின்றோம். நம்முடைய ஒவ்வொருவரின் வாழ்வில் ஏற்படும் இன்ப துன்பங்களுக்கும் கிராமங்களில் இருக்கும் குல தெய்வங்களையே நம்பி இருக்கின்றோம். படையல்களையும் பலிகளையும் இட்டு நம் வேண்டுதல்களை நிறைவேற்றிக் கொள்கிறோம். நம்முடைய ஊர்களில் அநேக சிறு தெய்வங்கள் இருக்கின்றன. நாட்டுப்புற தெய்வங்களில் பெரும்பான்மை பெண் தெய்வங்களாகவே இருக்கின்றன. அத்தெய்வங்களுக்கான திருவிழா, பூசை முறைகளுக்கு வரையறை கிடையாது. நாட்டுப்புற தெய்வங்களுக்கு நாட்டுப்புற கதைகள், செவிவழிச் செய்திகள் நிறைய காணக் கிடைக்கின்றது. ஒரு குறிப்பிட்ட வட்டாரத்திற்கே அவை உரியவை என்பதையும் உணர முடிகிறது. அவ்வகையில் கொங்கு மண்ணை மையப்படுத்திப் பல்வேறு புதினங்களை பெருமாள் முருகன் படைத்துள்ளார். அவற்றில் இடம்பெறும் சிறுதெய்வ வழிபாடு குறித்து இக்கட்டுரை ஆராய்கின்றது.*

## குல தெய்வம்

மனித குலத்தில் அவதரித்து மக்களோடு மக்களாக வாழ்ந்து அவர்கள் குறைகளைக் களைந்து, செயற்கரிய செயல்களை செய்து மற்றவர்களும் தன்னைப் பின்பற்றும்படி வழிமுறைகளை வகுத்துச் சென்றவர்களே குலதெய்வம். உதாரணமாக இராமன், இயேசு பிரான், புத்தர், மகாவீரர் போன்றோர்களைச் சொன்னாலும் இவர்கள் அனைவரும் ஏற்றுக்கொண்ட தெய்வங்களாகவே எண்ணப் படுகிறார்கள்.

குலதெய்வம் என்பது இன்னும் சுருங்கி ஒரு குறுகிய வட்டத் திற்குள் அல்லது ஒரு குழுவுக்குள் அடங்கி விடுகிறது எனலாம். குறிப்பாக ஒருவருக்கு ஏற்பட்ட நம்பிக்கை அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் பரவி அவர் சமூகத்தவரால் அங்கீகரிக்கப்பட்டு வழிவழியாய் வருபவைதான் குலதெய்வ வழிபாடு.

### ஆண்வழி குலதெய்வம்

தன்னுயிரைப் பற்றியோ தன்னலத்தைப் பற்றியோ பொருட்படுத்தாது உடைமை களையோ, உயிரையோ தியாகம் செய்பவர்களே பெரும்பாலும் ஆண்வழி குலதெய்வமாக வணங்கப்படுகிறார்கள்.

### பெண் குலதெய்வம்

குழந்தைகளுக்காகவோ, கணவருக்காகவோ, குடும்ப மானத்திற்காகவோ தன்னுயிரை மாய்த்துக் கொண்டவர்களே குலதெய்வமாக வணங்கப்படுகிறார்கள். எடுத்துக்காட்டாக நல்லதங்காள் எனும் பெண் தான் பெற்ற குழந்தைகளை வறுமையின் காரணமாக கிணற்றில் தள்ளி தானும் உயிரை மாய்த்துக் கொண்டது. மேற்கு தொடர்ச்சி மலை அடிவார ஊர்களில் வீராண்டாள் எனும் வீரக்காள் போரில் இறந்த கணவருடன் உடன்கட்டை ஏறி தன் குலத்திற்கு பெருமை சேர்த்ததாக வரலாறு கொண்டு குல தெய்வமாக வணங்கப்பட்டு வருகிறார்கள்.

### நாட்டுப்புற தெய்வங்கள்

மாரியம்மன், காளியம்மன், கருப்பசாமி, சீலைக்காரி, பாண்டிச்சாமி இதுபோன்று இன்னும் பல தெய்வங்கள் இருக்கின்றன.

### கிராம தெய்வங்களின் பெயர்கள், குணத்தன்மை, செயல்கள்

கிராம தெய்வங்களுக்கு ஏராளமான பெயர்கள். இவற்றில் சில தெய்வங்களின் பெயர்களுக்கான பொருள் வெளிப் படையானது. ஆனால் பல தெய்வங்களின் பெயர்களுக்கான பொருண்மை அப்பகுதி மக்களுக்கே தெளி வாகத் தெரியாது என்பதால் அவற்றிற்கான பொருள் குறித்து அப்பகுதி முதியவர்களிடமிருந்து சிறிதளவு பெற வாய்ப்பிருக்கிறது. மேலும் இப்பெயர்களுக்கான பொருள் மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுபடுவதோடு, ஒரு கிராமத்தில் வழிபடக்கூடிய கடவுளை அக்கிராமத்திற்கு அருகே ஐந்தாறு மைல்கள் தள்ளியுள்ள கிராமத்தினர் கூட அறிய மாட்டார்கள். மேலும் கிராம தெய்வங்களில் காளிக்கு ஒரு முக்கிய இடம் தரப்படுகிறது.

### பெருமாள் முருகன் புதினங்களில் இடம்பெறும் சிறுதெய்வங்கள்

பெருமாள் முருகன் படைத்துள்ள புதினங்களில்

1. கூளியம்மா
2. முனிச்சாமி
3. தேவாத்தா
4. ஐயன்
5. தாண்டியான்
6. மாச்சாமி

ஆகிய கொங்கு வட்டாரத்தின் சிறுதெய்வங்கள் இடம்பெறுகின்றனர். இந்த தெய்வங்கள் புதினத்தில் பல்வேறு இடங்களில் சுட்டப்பட்டுள்ளனர்.

### மாதொருபாகன்

ஒவ்வொருவரும் தெய்வத்திடம் சென்று முறையிடுவது என்பது வழக்கம். கோயிலுக்குச் சென்று வந்தால் காரியம் கைகூடும் என்பது மக்களின் நம்பிக்கை. அதுபோலவே இக்கதையில் வரும் காளி என்பவனுக்கு திருமணம் ஆகி பத்தாண்டுகள் ஆகியும் குழந்தையில்லாத காரணத்தினால், இக்கதையில் நடமாடும் "தேவாத்தா" என்ற பெண் தெய்வத்திற்கு பூசை போட்டு பொங்கல் வைக்க வேண்டும் என்று எண்ணினர். அவ்வாறு செய்தால் குழந்தைப்பேறு கிடைக்கும் என்ற நம்பிக்கையைக் காணமுடிகிறது. மேலும் இத்தேவாத்தாவை மிகவும் ஆக்ரோசமான தெய்வமாக படைப்பாளர் படைத்துக் காட்டியுள்ளார். சாதாரணமாக படுத்துக்கிடந்த பெண்ணை அங்கே காணோம் சிவப்பு நிற ஆடையில் உடல் முழுக்க குங்குமம் தூவப்பட்ட சிவப்பில் ஆக்ரோசம் கொண்ட பெண் தெரிந்தாள் என்பதன் மூலமாக வெளிக்காட்டியுள்ளார்.

காலம் காலமாக சிறுதெய்வங்களுக்குப் பலியிடும் வழக்கம் இன்றும் தொடர்ந்து வரும் ஒன்றாக வழக்கத்தில் இருக்கிறது என்பதையும், கதையின் மூலமாக தெளிவுபடுத்தியுள்ளார். கோழி அறுத்து ரத்தம் முழுவதையும் அம்மாவின் காலடியில் விட்டார் என்பதன் வாயிலாக உணர்த்தியுள்ளார்.

### பூக்குழி

இக்கதையின் மூலமாகவும் சிறுதெய்வம் என்றாலே ஆக்ரோசம் கொண்டவையாக இருக்கும் என்பதை ஆசிரியர் தெளிவுபடுத்தியுள்ளார். இக்கதையில் கூளி என்ற தெய்வத்தினை குலதெய்வமாகக் காட்டியுள்ளார். கதையில் வரும் சரோசா கூளியைக் கற்பனை செய்து பார்க்கிறாள். அகட்டிய விழிகளுடன் கோரப்பற்கள் தெரிய தொங்கும் நாக்குடன் பேயாகத் தெய்வத்தைக் கற்பனை செய்து பார்த்து பயந்தாள் என்று கூறியுள்ளார். இதிலிருந்து பெரும்பாலும் சிறுதெய்வத்தில் உள்ள பெண்தெய்வங்கள் பார்ப்பதற்கு கொடூரமானவையாகவே காட்சியளிக்கும் என்பது புலப்படுகிறது.

### ஆளண்டாப்பட்சி

தெய்வம் பெரும்பாலும் மனிதர்களுக்கு உதவும்போது நேரடியாக வருவதில்லை. அது மனித வடிவிலோ அல்லது விலங்குகளின் வடிவிலோதான் கிடைக்கும் என்பது இன்றளவும் உள்ள நம்பிக்கை என்பதனை ஆளண்டாப்பட்சி என்ற இந்த புதினத்தின் மூலம் தெளிவுபடுத்தியுள்ளார். எவ்வாறெனில் பிழைப்பிற்காக இடம் தேடிச் செல்லும் ஒருவர் எந்தப் பக்கம் செல்ல வேண்டும் என்று தெரியாது அலையும் நேரத்தில் நடந்த நிகழ்ச்சி அவர்களின் தெய்வ நம்பிக்கையினை வலுவுட்டுகிறது. திக்கற்றவர்களுக்குத் தெய்வமே துணை என்பது பழமொழி. அதைப்போல கூளியாயித் தாயி மாட்டு ரூபத்தில் வலம் வந்து இங்க இருன்னு சொல்றாப்பா. இல்லீன்னா திந்நீறு கீழ கொட்டி இருக்குமா? என்ற இந்த வரியானது தெய்வம் எந்த உருவத்திலும் வரும் என்ற அவர்களின் ஆழமான நம்பிக்கையை வெளிக்காட்டியுள்ளார்.

இதுபோன்று தான் இன்றும் கிராமப் புறங்களில் பூப்போட்டுக் கேட்பது, திருநீறு போட்டுப் பார்ப்பது போன்ற நம்பிக்கையினை செயல்படுத்துகின்றனர். இதனையே ஆசிரியர் அவருடைய கதைகளின் வாயிலாகக் காட்டி நமக்குத் தெரியப்படுத்துகிறார்.

### முடிவுரை

நாட்டுப்புறத் தெய்வங்கள் தங்களுக் கென்று சிறப்பான இடத்தினைப் பெற்றுள்ளது. அதிலும் பெண் தெய்வங்கள் முக்கியப் பங்கினை வகிக்கின்றன. நாட்டுப்புறத் தெய்வங்கள் அண்டம் முழுவதும் தொடர்பில்லாமல், கிராம வாழ்க்கையோடு தொடர்பு கொண்டவையாக மட்டுமே காணப்படுகின்றன. ஒவ்வொரு தெய்வமும் ஒரு குறிப்பிட்ட வட்டாரத்திற்கு மட்டுமே உரியவையாகவும் உள்ளன. அங்கு வாழக் கூடிய மக்களின் நம்பிக்கையாகவும், வாழ்க்கையாகவும் அத்தெய்வமானது செயல்படுவதனை ஆசிரியர் அவருடைய புதினங்களில் வெளிப்படுத்தியுள்ளதை இக்கட்டுரையில் காண முடிகின்றது.

### துணைநின்ற நூல்கள்


1. பெருமாள்முருகன், புக்குழி, காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், இரண்டாம் பதிப்பு - 2014
2. பெருமாள்முருகன், ஆளண்டாப் பட்சி, காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், 2012
3. பெருமாள்முருகன், மாதொருபாகன், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், 2010